# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மார்ச் 12, 2022

Weekly E-paper ● March 12, 2022



# ஐந்து மாநிலங்களின் தேர்தல் சொல்லும் பாடம்

எழில். இளங்கோவன்

## பேரறிவாளன் பிணையும் எழுவர் விடுதலையும்

இராம.வைரமுத்து

## சாதி ஒழியவேண்டும்

தலையங்கம்

## இமாலய யோகியும் ஊழலும்

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மார்ச் 12, 2022 Weekly E-paper ● March 12, 2022


# ஐந்து மாநிலங்களின் தேர்தல் சொல்லும் பாடம்

**எழில். இளங்கோவன்**

வடக்கே பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐந்து மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் வந்து விட்டன.

உத்தரப்பிரதேசம், கோவா, உத்தரகாண்ட், மணிப்பூர் ஆகிய நான்கு மாநிலங்களில் பா.ஜ.க.ஆட்சியைப் பிடித்துவிட்டது. பஞ்சாபின் ஆட்சி ஆம் ஆத்மியிடம் போய் விட்டது. வழக்கம் போல் தலைவர்கள், மக்கள் தீர்ப்புக்குத் தலைவணங்குவதாகச் சொல்லி முடித்துக் கொண்டார்கள்.



பஞ்சாப் ஆம் ஆத்மி ஆட்சியில் இருந்தாலும், அது பா.ஜ.கவின் பின்புலத்தில்தான் இருக்கிறது. நடந்து முடிந்த தேர்தலில் ஆம் ஆத்மி தலைவர்கள் பா.ஜ.கவை விமர்சித்துப் பேசவில்லை என்பது கருதத்தக்கது. விவசாயிகளின் கடும்போராட்டத்தாலும், பா.ஜ.க மீது இருந்த மக்களின் கோபத்தாலும் வாக்குகளைக் கவனமாக ஆம் ஆத்மி மூலம் அறுவடை செய்திருக்கிறது பா.ஜ.

உத்தரப் பிரதேசத்தில் கடந்த யோகி ஆதித்யநாத் ஆட்சி எப்படி இருந்தது?

ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்களில் கொரொனா பெருந்தொற்றைக் கட்டுக்குள் கொண்டு வந்தார் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள். ஆனால் உ.பியில் மருத்துவமனைகளில் இடமில்லை, ஆக்சிஜனுக்கு மிகப்பெரும் பற்றாக்குறை, தெருத் தெருவாக எங்கும் பிணங்கள் எனச் சொல்லொனாக் கொடுமைகளால் கதறினார்கள் மக்கள். ஆக்சிஜன் இல்லாமல் 80 குழந்தைகள் இறந்தார்கள் அங்கே.

உ.பியில் சட்டம் ஒழுங்கைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. மாட்டு இறைச்சி வைத்திருந்தார்கள் என்று இஸ்லாமிய, தாழ்த்தப்பட்டவர்கள் அடித்துத் துன்பப்படுத்தப்பட்டும், கொலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள். பாலியல் வன்புணர்வுக்கு ஆளான பெண்கள் கொல்லப்பட்ட நிகழ்வுகளும் அங்கு உண்டு.

இந்தத் தாக்கத்தைக் கோவா, உத்தரகாண்ட், மணிப்பூர் மாநிலங்களிலும் பார்க்கலாம்.

இவ்வளவையும் மீறி பா.ஜ.க ஆட்சியைப் பிடிக்கிறது. இது கவலைக்குரிய செய்தி.

மாநிலத்தின் சின்னஞ் சிறிய உதிரிக் கட்சிகளை வைத்துக் கொண்டு வாக்குகளை எல்லாம் அள்ளிவிடலாம் என்ற அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையில் இருந்தார் அகிலேஷ் யாதவ். காங்கிரஸ், பகுஜன் சமாஜ் போன்ற கட்சிகளை அரவணைக்காமல் களம் கண்டது அவரின் பலவீனம்.

அங்குள்ள காங்கிரஸ் கட்சியின் கோஷ்டி பூசல்கள், அக்கட்சியின் தோல்வியில் பெரும் பங்கு வகிக்கிறது எனலாம். யோகி ஆதித்யநாத் தேர்தலுக்கு முன்பே ஓராண்டாக தேர்தல் பணியைத் தொடங்கிய நிலையில், காங்கிரஸ் கட்சி 4 அல்லது 5 மாத காலத்தில் களத்திற்கு வருகிறது.

பகுஜன் சமாஜ் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கன்சிராமுக்குப் பின், மாயாவதியால் அக்கட்சி சரிந்து வருகிறது.

உ.பி. மக்களை விழிப்படைய விடாமல் மதம் என்ற பெயராலும், ராமன், கிருஷ்ணன் என்று கடவுளின் பெயராலும், மயக்க வைத்திருப்பதில் பா.ஜ.க வின் சூழ்ச்சியும், பலமும் இணைந்து இருக்கிறது.

இவையெல்லாம் இந்த ஐந்து மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் கற்றுத்தரும் பாடங்கள்.

இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு, கவனமாகப் பரிசீலித்து அடுத்த இரண்டு ஆண்டுகளில் வரவிருக்கும் ஒன்றிய அரசின் பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலையில் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன.

பா.ஜ.கவை வீழ்த்துவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் தனி மரம் தோப்பாகாது என்பதை இனியாவது தலைவர்கள் புரிந்து கொள்வது ஆகும் !

●

- உத்தரப் பிரதேசத்தில் 2017 ஆம் ஆண்டு தேர்தலில் பா.ஜ.க பெற்ற தொகுதிகள் = 312
- 2022ஆம் ஆண்டுத் தேர்தலில் பா.ஜ.க பெற்ற தொகுதிகள் = 255
- கடந்த தேர்தலை விட இந்தத் தேர்தலில் பா.ஜ.க. இழந்த தொகுதிகள் = 57
- 2017 தேர்தலில் சமாஜ்வாதி கட்சி பெற்ற தொகுதிகள் = 47
- 2022 தேர்தலில் பெற்ற தொகுதிகள் = 111
- இந்தத் தேர்தலில் சமாஜ்வாதி கட்சி கூடுதலாக பெற்ற தொகுதிகள் = 64

**– இந்த வேறுபாடுகளில் இருந்து பா.ஜ.கவின் செல்வாக்குச் சரிவும், சமாஜ்வாதி கட்சியின் செல்வாக்கு உயர்வும் கவனிக்கத்தக்கது.**

# பேரறிவாளன் பிணையும் எழுவர் விடுதலையும்

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து

இராஜீவ் காந்தி கொல்லப்பட்ட வழக்கில் 11.06.1991 அன்று குணசேகரன் (குயில்தாசன்) - அற்புதம் அம்மாள் ஆகியோரின் 19 வயது மகன் பேரறிவாளனை "வெறும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகத்தான் அழைத்துச் செல்கிறோம், நாளை காலையில் அனுப்பி விடுவோம்" என்று கூறி வீட்டிலிருந்து காவல்துறையினர் அழைத்துச் சென்றனர். அதன்பின் காவல்துறை எடுத்த நடவடிக்கையால் நீதிமன்றம் மூலம் பேரறிவாளன் மரண தண்டனைப் பெற்று பின்னர் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு 32 ஆண்டுகள் அவரின் வாழ்க்கை சிறையிலேயே கழிந்தது.

பெட்டிக்கடைகளில் கூடக் கிடைக்கும் 9 வோல்ட் சிறிய பேட்டரி வாங்கினார் என்பதுதான் பேறறிவாளன் மீது காவல்துறையினர் சுமத்திய குற்றம். ராஜீவ் காந்தியைக் கொல்ல தனு வெடிக்கச் செய்த பெல்ட் வெடிகுண்டில் பயன்படுத்தியது அந்த பேட்டரிதான் என்றும், வழக்கின் முக்கியக் குற்றவாளி சிவராசன் சொல்லித்தான் பேட்டரி வாங்கிக் கொடுத்தார் என்றும் பேரறிவாளன் மீது குற்றம் சுமத்தப்பட்டது. கடைக்காரர் பேரறிவாளனை அடையாளம் கண்டதும், இரண்டு மாதத்துக்குப் பிறகு சட்டைப் பையிலிருந்து, பொருள் வாங்கியதற்கான ரசீது கிடைத்ததும் பேரறிவாளனுக்கு எதிரான ஆதாரங்களாகக் காட்டப்பட்டது.

2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு அரசு பேரறிவாளன், முருகன், நளினி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்யலாம் என்று பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரையைச் சுட்டிக்காட்டி பேரறிவாளன் தரப்பில் தன்னை இந்த வழக்கிலிருந்து விரைவில் விடுதலை செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கின் விசாரணை உச்சநீதிமன்றத்தில் நீதிபதி நாகேஸ்வர ராவ் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது பேரறிவாளன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சங்கரநாராயணன் "பேரறிவாளன் 32 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்து வந்துள்ளார். அவரால் யாரையும் சந்திக்க முடியவில்லை" என வாதாடினார். இதைத் தொடர்ந்து வாதாடிய ஒன்றிய அரசின் கூடுதல் வழக்கறிஞர் நட்ராஜ், "இந்த வழக்கில் மனுதாரரின் கோரிக்கை என்னவென்றால் அவருடைய கருணை மனு பரிசீலனையிலுள்ளது. ஆகவே அவர் ஜாமீனில் வெளியே இருக்க வேண்டும் என்பதுதான். அவருக்கு முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அது தற்போது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது. ஆகவே ஏற்கெனவே இவர் இந்தச் சலுகையைப் பெற்றுவிட்டார். அதாவது அவருடைய கருணை மனு நீண்ட காலம் கிடப்பில் உள்ளதால்தான் அவருடைய மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது" எனக் கூறினார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "மாநில அரசின் அமைச்சரவை எடுத்த முடிவை ஏன் ஆளுநர் ஏற்கவில்லை. அதை ஏன் ஆளுநர் மத்திய அரசிற்கு அனுப்பினார். அவர் மாநில அரசைத்தானே நிர்வகிக்கிறார்?" என கேள்வி எழுப்பினார்.



அப்போது குறுக்கிட்ட தமிழக அரசின் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் திவேதி, "இந்த நாட்டின் தேசப்பிதா மகாத்மா காந்தியைச் சுட்டுக்கொன்ற கொலைக்குற்றத்தில் கைதான கோபால் கோட்சேவே (நாதுராம் கோட்சேவின் சகோதரர்), 14 ஆண்டுகளில் வெளியே வந்துவிட்டார். ஆனால் இவர்கள் 31 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையிலேயே இருக்கிறார்கள். முன்னாள் பிரதமரின் வழக்கு என்பதற்காக மட்டுமே, இவர்களை இந்தளவுக்குப் பலிகொடுப்பதில் எனக்கு உடன்பாடில்லை. இவ்விஷயத்தில் மாநில அரசின் தீர்மானத்தையே கணக்கில் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்.

இந்த வாதங்கள் அனைத்தையும் கேட்ட நீதிபதி, பேரறிவாளன் 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார். அவருடை வயது, உடல்நலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவருக்கு இந்த நீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளது. அவர் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் சிபிஐ அலுவலத்தில் ஆஜராக வேண்டும்" என உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு "பேரறிவாளன் வழக்கு மட்டுமின்றி 'எந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்திலும் மாநில அரசு தீர்மானம் நிறைவேற்றிக் கொள்ளலாம்' என்ற மாநில அரசின் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கான வழக்காகவும், மாநில அரசுக்கு அதற்கான முழு அதிகாரமும் உள்ளதென்பதை நிறுவிடும் வழக்காகவும்" பார்க்கப்படுகிறது. நீதிபதி அளித்துள்ளத் தீர்ப்பும் அதையே உறுதி செய்கிறது.

மாநில அரசின் தீர்மானங்களுக்கு முறைப்படி ஒப்புதல் வழங்காமல், ஒன்றிய அரசுக்கு அனுப்பியதை நீதிபதி கண்டித்துள்ளதை அறிந்த பிறகாவது தமிழ்நாட்டின் ஆளுநர் "சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றித் தனக்கு அனுப்பி வைக்கப்பட்ட நீட் விலக்கு சட்ட மசோதா"வுக்கு ஒப்புதல் வழங்கிட வேண்டும். இல்லையெனில் உச்சநீதிமன்றத்தில் இருந்து தனக்குக் குட்டு விழும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பேரறிவாளனுக்கு பிணை வழங்கப்பட்ட நிலையில், அற்புதம்மாள் "பேரறிவாளன் 31 ஆண்டு சிறை, நன்னடத்தை, சிறையில் பெற்ற கல்வி, உடல்நிலை கருதி ஜாமின் வழங்கப்பட்டுள்ளது. பேரறிவாளனுக்கு ஜாமின் கிடைக்க துணை நின்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி. அதோடு தமிழக அரசு சார்பாக நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர்களுக்கு நன்றி" என்றும் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டின் முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு பேரறிவாளன் பரோலில் விடுதலை செய்யப்பட்டார் என்பதும், அதிலிருந்து அவரது பரோல் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கில் தொடர்புடைய மற்ற 6 பேரும், தனித்தனியாக மனு செய்தால் அவர்களுக்கும் பிணை கிடைக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் அவர்கள் மீதும் எவ்வித குற்றச்சாட்டுகளும் இல்லை. கடந்த 1991 ஜூன் முதல் இவர்கள் எழுவரின் சட்டப் போராட்டமும் ஒவ்வொரு கட்டமாக நகர்ந்து வந்திருக்கிறது. இந்த 31 ஆண்டுகளில், இவர்களுக்கு எந்த ஒரு சலுகையுமே கொடுக்கப்படவில்லை. இப்போதுதான் முதல் முறையாக பேரறிவாளனுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. எழுவருக்கும் முழுமையான விடுதலை கிடைக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. அந்த நாளை எதிர்பார்த்து உலகத் தமிழர்கள் மட்டுமின்றி மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரும் ஆவலோடு காத்திருக்கிறார்கள். ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## சாதி ஒழியவேண்டும்

சாதி ஒழியவேண்டும் என்பது ஐயா தந்தை பெரியாரின் கொள்கை.

அதற்குக் குறுக்கே கடவுள், மதம், வேத புராணம் என்று எவை வந்தாலும் அவைகளையும் எதிர்த்தார், பெரியார்.

பெண்ணடிமையின் மூலமே மதமும், சாதியும்தான். மதமும்,சாதியும் அமைதியைக் கெடுக்கும், கலவரத்தை உருவாக்கும், கொலைகளுக்கும் அவையே காரணம்.

2015ஆம் ஆண்டில் நடைபெற்ற பொறியியல் பட்டதாரி கோகுல்ராஜ் கொலை சாதி ஆணவக் கொலையாகும், அதுவும் கொடூரமானதாகும்.

பட்டியலினத்தைச் சேர்ந்த கோகுல்ராஜ், மாற்றுச்சமூகத்தைச் சேர்ந்தப் பெண்ணுடன் நல்ல நட்பு கொண்டிருந்தார்.

இதைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாத மாவீரன் தீரன் சின்னமலைப் பேரவையின் தலைவர் யுவராஜ், கோகுல் ராஜைத் தலையை வெட்டி, நாக்கை வெட்டி, தண்டவாளத்தில் வீசியிருக்கிறார், அவரைச் சேர்ந்தவர்களோடு என்பது வழக்கறிஞர் ப.பா.மோகனின் நேர்காணல் மூலம் தெரிய வந்துள்ளது.

ஏன் இந்தக் கொடூரக் கொலை?... சாதி, சாதி, சாதிதான்.

ரிக் வேதத்தில் சொல்லப்பட்ட நால்வருணங்கள், மனுஸ்மிருதி மூலம் சாதிகளாகக் கூர்மைப் படுத்தப்பட்டன.

சாதியைப் படிநிலைகளாகச் சொல்லி, அதில் தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம், மேல்சாதி - கீழ்சாதி என்ற பார்ப்பனிய விதைகளே இன்று கோகுல்ராஜ் போன்றவர்களின் மீது ஆணவக் கொலைகளாக வந்து நிற்கிறது.

இந்த வழக்கில் குற்றம் செய்தவர்கள் அனைவருக்கும் வாழ்நாள் தண்டனைகள் கிடைத்து, நீதி நிலை நின்றுள்ளது.

நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது என்பது சரிதான்.

அதை விட இத்தகைய ஆணவக்கொலைகள், சாதியக் கொலைகள், சாதிய வன்முறைகள் நடைபெறாமல் இருப்பதும், அத்தகைய சமூக அமைப்பு உருவாக வேண்டும் என்பதும் மிக முக்கியமல்லவா?

அதற்கு ஒரே வழி தந்தை பெரியார் சொன்னதுதான் "சாதி ஒழிய வேண்டும் !"

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## காஞ்சி மாவட்ட ஆலோசனைக் கூட்டம்



04-02-2022 அன்று பேரவையின் காஞ்சி மாவட்ட ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் இளமாறன் இல்லத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் செந்தாமரைக் கண்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர்கள் அன்பு, தாம்பரம் இளங்கோ, தாம்பரம் மோகன், தாம்பரம் செந்தில், கூடுவாஞ்சேரி முத்துகுமார், சாந்தசீலன், சிலம்பரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




## புகழுக்குரிய "முகம்" மா.மணி



1931ஆம் ஆண்டு பிறந்த (முகம்) மா.மணி, தன் 17ஆம் வயதில் இருந்தே இலக்கியத் துறையில் பெரிதும் ஈடுபாடு காட்டி வந்தார். 1953ஆம் ஆண்டு தந்தை பெரியாரின் "விடுதலை" நாளிதழில் அச்சுக்கோக்கும் பணியைச் செய்த இவர் பெரியாரின் தாக்கத்தால் ஈர்க்கப்பட்டார். 1983ஆம் ஆண்டு இவர் "முகம் " என்ற இலக்கிய இதழைத் தொடங்கி பன்மொழிப் புலவர் நாரண. துரைக்கண்ணன், பேராசிரியர் கா. அப்பாத்துரையார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் போன்றோரின் நட்பில் அவர்தம் வரலாறுகளை எழுதியுள்ளார். இவர் தன் 91ஆம் வயதில் மூப்பு காரணமாக காலமானார். இவரின் புகழ் என்றும் வாழும்.

# இமாலய யோகியும் ஊழலும்

மா.உதயகுமார்

‘பார்ப்பான் பண்ணையம் கேட்பாரில்லை’ என்ற நாட்டுப்புற பழமொழிக்கேற்ப கேட்பாரின்றி பார்ப்பனர்கள் அடித்த கொள்ளை இன்று அம்பலமாகியுள்ளது.

தேசியப் பங்குச் சந்தை ஆணையத்தின்(NSE) முன்னாள் தலைமை அதிகாரியான சித்ரா ராமகிருஷ்ணன், சிலருக்குச் சாதகமாகச் செயல்பட்டு பல்வேறு குளறுபடிகளை ஏற்படுத்தி பெருத்த கொள்ளையடித்திருப்பது தொடர்பான குற்றச்சாட்டில் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார். இக்குற்றச்சாட்டில் இன்னும் பல பார்ப்பனர்கள் கைது செய்யப்பட வேண்டும்.



சித்ரா ராமகிருஷ்ணன்

இமயமலை யோகி ஒருவரின் ஆலோசனைப்படி தாம் செயல்பட்டதாக சித்ரா இராமகிருஷ்ணன் கூறியிருக்கிறார். பல இலட்சம் கோடிகள் புரளும் பங்குச் சந்தையின் முக்கியத் தகவல்களை அந்நியர் ஒருவரிடம் சொன்ன குற்றத்திற்காகவும் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இடஒதுக்கீட்டால் தகுதி திறமையெல்லாம் போய்விட்டதென்றும், இலஞ்சம் ஊழல் பெருகிவிட்டதென்றும் திரும்பத் திரும்பப் பொய்சொல்லும் பார்ப்பனர்கள் அடித்திருக்கும் கொள்ளையைப் பாருங்கள்.

மேலும் தேசியப் பங்குச் சந்தையின் முடிவுகளை ஒரு யோகியின் ஆலோசனைப்படி எடுத்தேன் என்று ஒரு தலைமை நிர்வாக அதிகாரி கூறுவதிலிருந்து அவாளின் தகுதி திறமையைப் பற்றி உலகம் அறியும்.



ஆனந்த் சுப்ரமணியம்

இந்த சித்ரா இராமகிருஷ்ணன், அவருடைய உறவினர் ஆனந்த் சுப்ரமணியம் என்பவரை முக்கிய அதிகாரியாக நியமித்துக் கொண்டு, தலைமை அதிகாரியான ரவி நாராயணன் என்கிற இன்னொரு பார்ப்பனரோடு சேர்ந்து கூட்டுக் கொள்ளை அடித்துள்ளார்கள்.

ஆனந்த் சுப்ரமணியம் என்பவரின் ஊதியத்தை இரண்டே ஆண்டுகளில் 1.68 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி வரை உயர்த்தியுள்ளார். அவாள் நடத்தும் ராஜ்ஜியம். நம் கண் முன் நடக்கும் ராமராஜ்ஜியம்!

பார்ப்பனர்கள் சிலர் கூடி அடித்தக் கொள்ளையைப் பார்ப்பனர்கள் பலர் சேர்ந்து மூடி மறைத்துக் காப்பாற்ற 2018ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்துள்ளனர். வரலாறு காணாத ஊழல் செய்திருக்கும் இந்தப் பார்ப்பனக் கும்பலுக்கு, இந்த நடவடிக்கைகளைக் கண்காணித்து தண்டனை வழங்க வேண்டிய செபி(Securities Exchange Board of India) அளித்திருக்கும் தண்டனை, சித்ரா இராமகிருஷ்ணனுக்கு வரவேண்டிய போனஸ் ரூபாய் 4.37 கோடியை நிறுத்தியது.

“பிராமணர்களுக்குத் தலைமுடியை மழித்தலே கொலைத் தண்டனையாகும். மற்றவருக்கு உயிரை எடுப்பதே கொலைத் தண்டனையாகும்.” (8:379)

“பிராமணன் எல்லா பாவங்களும் செய்தாலும் அவனைக் கொல்லாமல் காயமின்றி அவன் பொருளுடன் ஊரை விட்டுத் துரத்தினால் போதும்.” (8:380)

மனுநீதியின் இந்த இரண்டு விதிகளும் எப்படி நவீன முறையில் பின்பற்றப்பட்டிருக்கிறது என்பதை, இப்போதெல்லாம் மனுநீதி எங்கிருக்கிறது என்று கேட்கும் பார்ப்பனரல்லாதார் உணர வேண்டும். மனுநீதியின் பெயரால் இத்தனையையும் செய்து கொண்டுதான் பார்ப்பனர்கள் சமத்துவம் பேசுவது போல் வேடமிடுகின்றனர் என்பதை நாம் விளங்கிக் வேண்டும்.

2G என்ற ஒரு கற்பனைக் குற்றச்சாட்டை வைத்து, தி.மு.கழகத்தின் அந்நாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா அவர்களையும், கனிமொழி அவர்களையும் கைது செய்து, பொய் மூட்டைகளை ஊடகங்கள் மூலம் அவிழ்த்துவிட்டு பார்ப்பனர்கள் குளிர் காய்ந்ததை, 2G வழக்கின் தீர்ப்பு உலகுக்குக் கொணர்ந்தது.

ஆனால் தேசியப் பங்குச் சந்தையின் இந்த ஊழலை, உலகறியாமல் 4 ஆண்டுகள் மூடி மறைத்து, இன்று முழுக்க நனைந்த பின் முக்காடு போட முடியாமல், நீதிமன்றம் சி.பி.அய்யையும், செபியையும் கேள்வி எழுப்பியவுடன், இமயமலை யோகியின் பெயரால் “இமாலய ஊழல்” செய்திருக்கும் சித்ரா இராமகிருஷ்ணன் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

வெளிவந்த ஊழல்களும், கொள்ளைகளும் இவ்வளவுதான். கடலளவு இன்னும் மறைந்திருக்கிறது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே பார்ப்பனியத்தைச் சிதறடிக்கும். இந்த விழிப்புணர்வை இந்தியா முழுதும் கொண்டு செல்ல வேண்டியது நம் அனைவருடைய கடமையுமாகும்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian